சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No.194/2022

பெயர். திரு. சிரஞ்சீவி
த/பெ. சந்திரன்

நாள்.03.11.2025

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் முதல் நிலை விசாரணை தொடர்ச்சி**

1) விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை நகல் ம.த.சா.ஆ.1. எனது தந்தையின் பிரேத பரிசோதனை அறிக்கை நகல் ம.த.சா.ஆ.2. என் தந்தையின் வாரிசு சான்றிதழ் ம.த.சா.ஆ.3. எங்களுடைய ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகங்களின் நகல்கள்( அசலுடன் ஒப்பிடப்பட்டது) ம.த.சா.ஆ.4 முதல் 11. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ், ஓட்டுநர் உரிமத்தின் நகல்கள் மற்றும் காப்பீட்டுச் சான்றிதழ் ம.த.சா.ஆ.12 முதல் 14. குற்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பிரிவு மாற்று அறிக்கை நகல் ம.த.சா.ஆ.15. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

2) விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான்தான் புகார் அளித்தேன். அதில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் சரியானவை என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் என் தகப்பனாருக்கு ஆதார் அட்டை இருந்தது. ஆதார் அட்டைப்படி என் தந்தைக்கு விபத்து சமயத்தில் 61 வயது என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் என் தகப்பனார் இருசக்கர வாகனம் ஓட்டிச் சென்றார் என்றால் சரிதான். நான் அளித்த புகாரில் சாலையைக் கடக்கும்பொழுது விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என் தகப்பனார் விபத்து சமயத்தில் கொத்தனார் வேலை செய்து வந்தார். மேட்டுப் பாளையம் சந்திப்பில் காய் கறி

வாங்கிக் கொண்டு எங்கள் ஊருக்கு வரும்பொழுது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு தலையில் அடிப்பட்டது. தலையில் அடிப்பட்ட காயத்தினால்தான் இறந்தார் என்றால் சரிதான். என் தகப்பானர் விபத்தின்பொழுது தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு அணிந்திருந்தால் விபத்தில் அடிப்பட்டிருக்காது என்றால் சரியல்ல.

3) விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் டிஎன் 12 ஏஜே 5089. அந்த வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து 24.07.2022 ல் நடைபெற்றது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் புதுப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். இரண்டு வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு தர கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. தலைக்கவசம் இல்லாமல் இறப்பை அவரே ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் தொழில் மற்றும் வருமானத்தை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை மிக அதிகப்படியானது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை